019

**001/DM/24**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (10)

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was Muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them, "You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm".

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. தேசிய ஒருமைப்பாடு.

3. கல்வியின் சிறப்பு.

4. பதினைந்து நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு வேண்டி துறைத்தலைவருக்குக் கடிதம் எழுதுக. (10)

[Turn over

## பகுதி — II

5. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும். (5 × 1 = 5)

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ. சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும் போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

(அ) வ.உ.சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை?

(ஆ) வ.உ.சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?

(இ) வ.உ.சி. சென்னைக்குச் செல்லும் போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?

(ஈ) வ.உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?

(உ) சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் யார்?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. (5)

செல்வன் : வாங்க மாமா. நலமாக இருக்கின்றீர்களா?

மாமா : —————— நீ எப்படி இருக்கிறாய்?

செல்வன் : நன்றாக இருக்கிறேன். உட்காருங்கள் மாமா.

மாமா : அப்பா, அம்மா எங்கே சென்றுள்ளார்கள்?

செல்வன் : இருவரும் கடைவீதிக்குச் ——————

மாமா : அப்படியா? ——————

செல்வன் : நன்றாகப் படிக்கிறேன் மாமா.

மாமா : நாளை விடுதலை நாள் விழா. உங்கள் பள்ளியில் போட்டிகள் நடத்துகிறார்களா?

செல்வன் : ஆம் மாமா. நான் —————— போட்டியில் கலந்து கொள்கிறேன்.

மாமா : வெற்றி பெற வாழ்த்துகள்.

செல்வன் : ——————

## பகுதி — III

### மொழிப் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40 × 1 = 40)

7. 1330 என்ற எண்ணை எழுத்தால் எழுதுக.

8. 'நம்பிக்கை' என்ற சொல்லைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

9. Face book – கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க.

10. தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் எத்தனை?

11. அம்மா – வேறு சொல் தருக.

    ——— ன் ———

12. சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக.

    கூடாது யாரையும் போடக் எடை குறைவாக

13. உயிர் நெடில் எழுத்துக்களை எழுதுக.

14. பிழை திருத்தி எழுதுக.

    மயில் அலறும்.

15. விடைக்கேற்ற வினா அமைத்து எழுதுக.

    பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவு அளிப்பது உயிர் கொடுப்பதற்கு இணையானது. அதுவே சிறந்த அறமாகும்.

16. எழுத்துக்களை மாற்றி சொல் ஒன்றை எழுதுக.

    மத்ருதும்வ –

17. இருபொருள் தருக.

    திங்கள் –

18. உயர்திணை சொல்லை எடுத்து எழுதுக.

    வயல், புத்தகம், ஆசிரியர், மரம்.

19. மின் + அஞ்சல் – இச்சொற்களைச் சேர்த்து எழுதுக.

20. பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து எழுதுக.

உன்னுடைய நண்பன் ——————? (எது, யாது, யார்)

21. சினைப்பெயரை எடுத்து எழுதுக.

நாள், கண், பூங்கா, வட்டம்.

22. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.

முத்தமிழ் – ——————.

23. எதிர்ச்சொல் எழுதுக.

துன்பம் ×

24. ஓர் எழுத்துச் சொல்லைக் கொண்டு நிரப்புக.

—————— சுடும்.

25. அகர வரிசையில் எழுதுக.

இன்பம், அன்பு, ஊக்கம், ஆற்றல், ஈகை, உணர்வு.

26. முடியும் எழுத்தில் தொடங்கும் சொல்லை எழுதுக.

சிறகு —————— (புகை, குயில், மிளகு)

27. தமிழ்நாடு அரசின் தேசிய விளையாட்டு எது?

28. பெயர்ச்சொல்லை எடுத்து எழுதுக.

மயில் தோகையை விரித்து ஆடியது.

29. எழுத்தை நீக்கி, சொல்லை எழுதுக.

மயிழுல் தோகை –

30. ஒத்த ஓசையில் முடியாத சொல்லை எடுத்து எழுதுக.

(படங்கள், ஊஞ்சல், கால்கள், மரங்கள்)

31. பின்வரும் எழுத்துப் பிழையை நீக்கி சரியான விடை எழுதுக.

நன்ரி –

32. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்றை எழுதுக.

விதை –

33. திருக்குறளை இயற்றியவர் யார்?

34. 'நலமெல்லாம்' – பிரித்து எழுதுக.

35. கீழ்க்கண்ட பட்டப்படிப்புப் பெயரைத் தமிழில் எழுதுக.

M.A.

36. "செய்" என்ற வினைச் சொல்லை நிகழ்காலச் சொல்லாக எழுதுக.

37. மயங்கொலி வேறுபாடு அறிந்து எழுதுக.

சூரியனில் இருந்து ———————— கிடைக்கிறது. (ஒளி/ஒலி)

சொல்லையும் பொருளையும் பொருத்துக.

38. இன்சொல் – கதிரவனின் ஒளி

39. வன்சொல் – நிலவின் ஒளி

40. அழல்கதிர் – கடுஞ்சொல்

41. தண்ணென்கதிர் – இனியசொல்

42. ஒரே ஓசையில் முடியாத சொற்கள்

(அ) தேசமடி – பூமியடி

(ஆ) போற்றிடடி – காத்திடடி

(இ) கும்மியடி – கோடி

(ஈ) போனதடி – போற்றிடவே

43. பின்வருவனவற்றுள் எது உள்ளரங்க விளையாட்டு இல்லை?

தாயம், ஐந்தாங்கல், கபடி, பல்லாங்குழி.

44. பின்வரும் சொல்லுக்கு இருபொருள் தருக.

அணி –

45. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.

அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

46. சரியான இணைச் சொற்களை எழுதுக.

திருவிழாவில் யானை ———————— வந்தது. (ஈடுஇணை/ஆடி அசைந்து)